★ அரசியல் கட்டுரை
★ நிலா முற்றம்
★ அறிவியல் விடயங்கள்
பல்சுவை அம்சங்களுடன்

★ சாளரம் ★

பாடசாலைகளிலும்
புத்தக நிலையங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம்
[33165]

பக்கங்கள்: நான்கு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
... ஜெ நூலகசே

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

வெளிவந்துவிட்டது!

★ சாளரம் ★

ஒகஸ்ட் — செப்ரெம்பர்
இதழ்
கேணல் கிட்டு நினைவு
சிறுவர் பூங்காவின்
அட்டைப்படத்துடன்
[33165]

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 21 — வெள்ளிக்கிழமை (07 — 10 — 1994) — UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 314

# முதல் சுற்று சமாதானப் பேச்சு முடிந்ததும் போர்நிறுத்தம் வருமென சந்திரிகா நம்பிக்கை!

## அரசின் தூதுக்குழு 12ஆம் திகதி வரும்

கொழும்பு, ஒக். 7

நான்கு அங்கத்தவர்கள் கொண்ட ஸ்ரீலங்கா அரசின் தூதுக்குழு இம்மாதம் 12 ஆம்திகதி யாழ்ப்பாணம்செல்வார்கள் என அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா அரசு பிரதிநிதிகளுக்கும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிக்கும் இடையிலான பூர்வாங்கப் பேச்சுவார்த்தை திட்டமிட்ட படி இம்மாதம் 13ஆம் 14 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

[இ-3]

## குருநகர்ப் பகுதி மீனவரின் வலையில் சிக்கிய ஏ.கே. 47

யாழ்ப்பாணம், ஒக். 7

பூநகரி — மண்ணித்தலைக் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவரின் வலையில் ஏ. கே. 47 ரகத் துப்பாக்கி ஒன்று சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு சிக்கிய இந்தத் துப்பாக்கிலை சம்பந்தப்பட்ட மீனவர், கடற்புலிகளின் பிரதேச அலுவலகம் ஒன்றில் ஒப்படைத்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

குருநகர் பாக் வீதியைச் சேர்ந்த இராசலிங்கம் புகன் என்பவரே இந்தத் துப்பாக்கியைக் கண்டெடுத்தவர் ஆவார்.

கடலில் ரோந்து செல்லும் படையினரின் துப்பாக்கியே கடலில் வீழ்ந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (ஒ-51)

### ராஜீவ் கொலைப் பின்னணி

## 'குற்றப்பத்திரிகை' படம் திரையிடுவதற்குத் தடை!

சென்னை, ஒக். 7

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையைப் பின்னணியாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட "குற்றப் பத்திரிகை" என்ற தமிழ்த்திரைப் படத்தைத் திரையிடக் கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றம் நேற்று தடை விதித்தது.

மத்திய திரைப்படத் தணிக்கைக்குழு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையின் போது உயர்நீதிமன்ற நீதிபதிகள் டி. எஸ். அருணாசலம், சி. ஜெயராம சோஸா ஆகியோர் இத்தடையை விதித்தனர்.

இப்படத்தை வயது வந்தோர் மட்டும் பார்க்கத் திரையிடலாம் என்று ஏற்கனவே தணிக்கை சபையின் மேன் முறையீட்டுச் சபை அளித்த உத்தரவையும் இந்த நீதிபதிகள் ரத்துச் செய்துவிட்டனர்.

இயக்குநர் எம். செல்வமணி தயாரித்து உள்ள இப்படத்துக்கு முதலில் தணிக்கைக்குழு அனுமதி மறுத்தது. பின்னர் அவரின் முறையீட்டை விசாரித்த தணிக்கைக் குழுவின் மேன்முறையீட்டு மன்றம் சில மாற்றங்களுடன் இப்படத்தை திரையிடலாம் என்று அனுமதித்தது.

அதை எதிர்த்து மத்திய திரைப்படத் தணிக்கைக் குழு சமர்ப்பித்த மனு மீது சென்னை உயர் நீதிமன்றம் நேற்று அளித்த தீர்ப்பில்—

இப்படம் சட்டவிரோதமான தீவிரவாதக் குழுவைப் போற்றும் வகையிலும் அதன் கொள்கையை ஆதரிக்கும் விதத்திலும் இருப்பதாகக் கூறியுள்ளது. (ஒ-எ)

## சர்வதேச சமாதான மாநாடு கொழும்பில்

### இலங்கைப் பிரச்சினை ஆராய்வு

கொழும்பு, ஒக். 7

சர்வதேச சமாதானத்துக்கான மாநாடு ஒன்று எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற உள்ளது.

சர்வமத சமாதானத்துக்கான இணையம் ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாட்டை பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா ஆரம்பித்து வைப்பார்

இலங்கைக்கு உதவி செய்துவரும் தொண்டர் அமைப்புக்களைச் சேர்ந்த 300 க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் மாநாட்டில் பங்குபற்றுவர்.

மாநாட்டில் சர்வதேசப் பிரதிநிதிகளுடன் இலங்கையைச்சேர்ந்த பௌத்த,கிறிஸ்தவ, முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக தெரிவிக்கப்படும் கருத்துக்களை ஒன்று திரட்டி முடிவு ஒன்றை எடுக்கும் நோக்குடன் இம்மாநாடு கூட்டப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## படையினர் சூடு; முகமாலை வாசி காயம்

யாழ்ப்பாணம், ஒக். 7

மேய்ச்சலுக்குச் சென்ற மாடுகளைப் பிடித்துவரச் சென்றவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார்.

இயக்கச்சி பாப்பான்குளப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு இடம் பெற்ற இச்சம்பவத்தில் இயக்கச்சி முகமாலையைச் சேர்ந்த மூத்ததம்பி தங்கவேலு (39 வயது) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(ஒ—15)

## ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவருக்கு விசேட பேட்டி

கொழும்பு, ஒக்ரோபர் 7

அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான முதல் சுற்று பேச்சுவார்த்தை முடிந்ததும், யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள முடியும் என்று பிரதமர் திருமதி சந்திரிகா குமாரதுங்கா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவர் வசந்தராஜாவுக்கு அளித்த விசேட பேட்டியின்போது பிரதமர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார்.

நேற்றிரவு இந்த விசேட பேட்டி ஒளிபரப்பானது.

ஐம்பத்தைந்து நிமிடங்கள் நடந்த இந்த விசேட பேட்டியின் போது, புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள், கொள்கைகள் சந்திரிகாவின் அரசியல் வாழ்க்கை என்பன குறித்து பல்வேறு வினாக்கள் கேட்கப்பட்டன.

விசேட பேட்டியின் சில பகுதிகள் வருமாறு:-

கேள்வி: நீங்கள் ஆட்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டதும் பல பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வைக் காணுவீர்கள் என தமிழ் மக்கள், சிங்களமக்கள், ஏன் சர்வதேச சமுதாயமுமே எதிர்பார்க்கிறது. கடந்த சில வாரங்களாக இராணுவம் விடுதலைப்புலிகளைத் தாக்குகிறது விடுதலைப்புலிகள் இராணுவத்தை தாக்குகின்றனர். மக்கள் அவலப்படுகின்றனரே. இது நல்லதல்லவே!

பதில் சமாதானப் பேச்சுக்கான ஒழுங்குகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்னும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவில்லை. பேச்சுவார்த்தைக்கான நாள் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறான நிலையில் இப்படியான சம்பவங்கள் இடம்பெறுவது இயல்பானதொன்றேயாகும்.

முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள அரச தரப்புப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் செல்லவுள்ளனர். முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தை பயன்தரும் வகையில் அமையுமாயின் அதைத் தொடர்ந்து யுத்த நிறுத்தம் மேற்கொள்ள முடியும் என நம்புகிறேன். யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படாத வேளையில் இவ்வாறான சிறு சிறு சம்பவங்கள் இடம்பெறும்.

கே: என்னைச் சந்தித்த விடுதலைப் புலிகளின் சில

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஹேமாவும், மகன் சஜித்தும் காமினிக்கு ஆதரவுதெரிவிப்பு

கொழும்பு, ஒக்.7

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் காமினி திஸநாயக்காவுக்கு ஆதரவளிப்பதென ஹேமா பிரேமதாஸாவும் அவரது மகன் சஜித் பிரேமதாஸாவும் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காமினி தங்களைச் சந்தித்து பேசினார் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா அமுல் நடத்திய கம்உதாவ, ஜனசவிய, இலவச சீருடை, மதிய உணவு முதலிய திட்டங்களைத் தொடர்ந்து கடைப்பிடிக்கப் போவதாக காமினி தங்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளார் என்று ஹேமாவும், சஜித்தும் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்தே தாங்கள் காமினிக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்ததாகவும் அவர்கள் கூறினார்கள்.

(ஒ-எ-6)

## அரசுடன் முஸ்லிம் காங்கிரஸுக்கு கருத்து முரண்பாடு எதுவும் கிடையாது

### பொதுச் செயலாளர் ஹக்கீம் தெரிவிப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கும் இடையே கருத்து முரண்பாடு ஏதும் கிடையாதென்று, முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ராவுப் ஹக்கீம் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் குழுக்களின் உபதலைவராக இருக்கும் இவர் இரு கட்சிகளுக்கும் இடையே கருத்து முரண்பாடு நிலவுவதாகக் கூறப்படுவது பற்றி நேற்று கருத்து வெளியிட்டார்.

இரு தரப்பினருக்கும் இடையே கருத்து முரண்பாடு நிலவுவதாக சிலர் குறிப்பிட்டிருப்பினும், அப்படியொன்றும் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு யுத்தத்துக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதே அனைத்து முஸ்லிம்களின் ஏகோபித்த முடிவு என்று தெரிவித்த அவர், இச்சமாதான முயற்சி குறித்து பிரதமர் சந்திரிகா எடுத்துவரும் நடவடிக்கைகள் பாராட்டப்பட வேண்டியவை என்றார்.

சமாதான முயற்சியில் வெற்றிபெறக்கூடிய ஆற்றல் பிரதமர் சந்திரிகாவுக்கு உண்டு என்றும் அவர் கூறினார். (இ-எ-6)

## வீடு மற்றும் சொத்துக்கள் இழந்த அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடு

யாழ்ப்பாணம், ஒக், 7

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையால் வீடு மற்றும் சொத்துக்களை இழந்த அரச ஊழியர்களுக்கு நஷ்டஈட்டுக் [illegible] களை வழங்க புனர்வாழ்வு, புனரமைப்பு [illegible] நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் இருந்து கிடைத்த நஷ்டஈடு தொடர்பான விண்ணப்பங்கள் வகைப்படுத்தப்பட்டு [illegible] முன்னுரிமை அடிப்படையில் [illegible] டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை— கடைகள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கான நஷ்டஈட்டை வழங்கவும் புனர்வாழ்வு அமைச்சு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## வடக்கு-கிழக்கில் ராணுவ நடவடிக்கை தொடரும்

### இடைநிறுத்த செய்திக்கு மறுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 7

யுத்த நடவடிக்கைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக வெளியான செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை எனவும் —

வடக்கு—கிழக்கில் வழமையான இராணுவ நடவடிக்கைகள் தொடரும் எனவும்—

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், மின்சக்தி அமைச்சருமான கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

கொழும்பு தமிழ் தினசரி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 13 ஆம்,14 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள விடுதலைப் புலிகளுடனான ஆரம்பகட்ட பேச்சுகளின் பின்பே யுத்த நிறுத்தம் பற்றியோ யுத்த இடைநிறுத்தம் பற்றியோ தீர்மானிக்கப்படும்.

ஆரம்ப பேச்சின் போது

(4ஆம் பக்கம்பார்க்க)

### ராணுவ நடவடிக்கையின்போது

## காணாமற்போன மூதாட்டி நேற்று கப்பலில் வந்தார்!

யாழ்ப்பாணம், ஒக். 7

கடந்த மாதம் 25 ஆம் திகதி வளலாய்ப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது காணாமற் போனதாகக் கருதப்பட்ட மூதாட்டி ஒருவர்—

நேற்று பிளாம்பயான் கப்பல் மூலம் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

இது என்ன அதிசயம்?

நடந்தது இது தான்:

அன்றைய இராணுவ நடவடிக்கையின்போது இந்தப் பெண்மணி தலையில் ஹெலி வேட்டுக்கு இலக்கானார்.

அப்போது அங்கு திடீரென காணப்பட்ட படையினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி வீசிய பிரசுரங்கள்!

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ்ப்பாணப் பகுதியை நேற்றுக் காலை 8.30 மணியளவில் வட்டமிட்ட ஹெலி ஒன்று துண்டுப் பிரசுரங்களை அள்ளி அள்ளி வீசியது.

கடந்த காலங்களில் வீசப்பட்ட முகாம்களுக்கு அருகில் உள்ள மக்களை வெளியேறும்படி கோரும் துண்டுப் பிரசுரங்கள் போல் அல்லாமல் இந்த துண்டுப் பிரசுரங்கள் முற்றிலும் வித்தியாசமானவையாக இருந்தன.

''வடக்கிலுள்ள அன்பான சகோதர சகோதரிகளே!''

(4ஆம் பக்கம் பார்க்க)

## எழுதுமட்டுவாள் வீதி மழையினால் சேதம்

### கிளாலிப் பயணிகள் பாதிப்பு

தென்மராட்சி, ஒக். 7

கடந்த திங்கட்கிழமை பெய்த கடும் மழையினால் கிளாலி —எழுதுமட்டுவாள் வீதி பாவிக்க முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளது.

நேற்று முன்தினம் இவ் வீதியூடாக கொழும்புப் பயணிகளை ஏற்றிவந்த இரண்டு ஒட்டோக்களும் பல மோட்டார் சைக்கிள்களும் தடம்புரண்டன.

அவற்றில் பயணம் செய்தவர்கள் சேற்றுத் தண்ணீரில் வீழ்ந்தனர்.

இந்த வீதி கடந்த மே மாதம் திருத்தியமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை கச்சாய்—கிளாலி வீதியும் மழையினால் சேதமடைந்துள்ளது.

(இ—117)

### முச்சந்தி முரளி



ஹேமாவும் மகனும் கடைசியிலே காமினியாரிடம் சரணடையவேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டிருக்கு பாருங்கோ...!

## அவசரகால சட்டம்நீடிப்பு

கொழும்பு, ஒக். 7

வடக்கு—கிழக்கு மாகாணங்களிலும் அதன் எல்லைப் புறங்களிலும் அமுல் செய்யப்பட்ட அவசரகாலச் சட்ட விதிகள் மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது.

(இ)

## குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஒக். 7

திருகோணமலையில் இராணுவத்தினர் தமிழ் குடும்பஸ்தர் ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி வெற்றிச்சேனையில் 5 பிள்ளைகளின் தந்தையான துரையப்பா கனகசூரியர் (47வயது) என்பவரே கொல்லப்பட்டவராவர்.

(இ—3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

3 அங். 4 அங். எஸ்லோன் பைப்புகள், எனாமல் பெயின்ற் ரின்கள், பிளாஸ் ரிக் பாத்திரங்கள், அலுமினி யம் ஆப்ப தாச்சிகள், பொலித்தீன்தாள், சொப்பிங் பாக் சகல அளவுகளிலும் மொத்தமாகவும் சில்லறை யாகவும் விற்பனைக்குண்டு. நாதன் களஞ்சியம், இல. 213C, கிட்டுசாலை, மருத் துவமனை வீதி, யாழ்ப்பா ணம். (33180)

### புறொயிலர் விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள், சேவல் கோழிகள், விறாத்து கோழிக்குஞ்சுகள், இறைச்சிக்கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து பெற்றுக்கொள்ள லாம். ''மல்லிகாபதி'', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (33188)

### வீடும், காணியும் விற்பனை

அராலி றோட், சங்கானை யில் 8 பரப்போடு வீடும், 15 பரப்புக் காணியும் விற் பனைக்குண்டு. தொடர்பு: V. N. பொன்னுத்துரை, அராலி றோட், காந்தன், சங்கானை. (7664)

### தேவை

வயோதிபத் தம்பதிகளுக்கு சமைக்கவும், வீட்டைப் பரா மரிக்கவும் வீட்டோடு இருக் கத் தகுந்த பெண் உதவி யாள் உடன் வரவும். சம் பளம் பேசிக் கொள்ளலாம். இல. 25, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். (33221)

### சரஸ்வதி படம் இனாம்

வரும் நவராத்திரியை முன் னிட்டு நீங்கள் சேர்த்து வைத் திருக்கும் இட்லிமா, தோசை மா, ஜீவாகாரம் இவைகளில் 3 கிலோவுக்குரிய வெற்று பைக்கற்றுகளை கொடுத்து ஒரு சரஸ்வதி படத்தை இனாமாக எமது கிளைகளில் பெற்றுக் கொள்ள லாம். அண்ணா தொழில கம் இணுவில். (சி-9384)

### உடன் தேவை

அழகு சாதன விற்பனை நிலையத்திற்கு ஆண்/பெண் விற்பனையாளர் உடன் தேவை, தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்பு: சுழலகம் (சேக்கிள் சென்ரர்), பிரதான வீதி, சங்கானை. (சி-9261)

### மணப்பெண் தேவை

ஆங்கில மொழி மூல பட்ட தாரித் தராதரத்துடன் திட்டமிடல் அமைச்சில் உத வித் பணிப்பாளராகவும், பல் கலைக்கழக பகுதிநேர விரி வுரையாளராகவும் சேவை செய்யும் யாழ்ப்பாண இந்து மத செவ்வாய் தோஷமற்ற 30 வயது மணமகனுக்கு மருத்துவம், பொறியியல், கணக்கியல், பட்டதாரித் தராதரமுடைய மணப்பெண் தேவை. இல. 951, மே/பா உதயன். (7946)

### இசை வகுப்புகள்

விஜயதசமி ஆரம்ப வகுப்பு களிற்கு சேரவிரும்புவோர் 5-10-94 (புதன்) முதல் 14-10-94 (வெள்ளி) வரை விண்ணப்பப் படிவங்களை மன்ற அலுவலகத்தில் பெற் றுக் கொள்ளலாம். அலு வலக நேரம் 4-30 — 6-30 (மாலை) யாழோசை, 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். (33117)

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்குகந்த நல்ல ரக தென்னம் நாற்றுக்கள் சாதாரணம், செவ்விளனி, வத்தாவி இனங்கள் விற்ப னைக்குண்டு. மு. காங்கேசு ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை. (33222)

### அச்சக இயந்திரம் தேவை

அச்சக இயந்திரம் விற்ப னைக்கு இருப்பின் அறிவகம் புத்தகசாலை 374, மணிக் கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (சி-9383)

### பாடசாலைகளில்

பாசையூர் சென். அன்ரனிஸ் றோ. க. மகளிர் வித்தியாலயத்தின் முத்தமிழ் விழா இன்று (வெள்ளி) முற்பகல் 9-30 மணிக்கு அதிபர் அருட் செல்வி கொஸ்கா தலைமை யில் நடைபெறும். கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் பிரதமவிருந்தின ராகக் கலந்து கொள்வார். (இ-30)

### நவராத்திரி சொற்பொழிவு

நவராத்திரி விழாவை ஒட்டி கொக்குவில் கிழக்கு பொற்பதி விநாயகர் ஆலயத் தில் 14ஆம் திகதி வரை தின மும் இரவு 6-30 மணி முதல் 7-30 மணி வரை பலாலி ஆசிரியர் கலாசாலை விரி வுரையாளர் திரு. சிவ. மகா லிங்கம் தொடர் சொற் பொழிவு நிகழ்த்துவார்.

---

**Spoken English**
With
**Grammar**
BY
**BRITTO**
**புதிய பிரிவு**

ஆரம்பம்:
**08-10-1994**
காலை 7 — 8 மணி

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
[சி-9382]

---

## Y. M. C. A. - JAFFNA
## TALENT CONTEST-1994

பின்வரும் வயது எல்லைகளுக்கான கால், அரையிறுதிப் போட்டிகள் **08 - 10 - 1994** (சனிக்கிழமை) சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபம், பரி. யோவான் கல்லூரி மண்டபங்களில் நடைபெறும்.

**கீழைத்தேச சங்கீதம்:**

**13** வயது கீழ் (வாய்ப்பாட்டு) —
பரி. யோவான் கல்லூரி — 8-30 a.m.

**16** வயது கீழ் (வாய்ப்பாட்டு) —
பரி. யோவான் கல்லூரி — 8-30 a.m.

**19** வயது கீழ் (வாய்ப்பாட்டு) —
பரி. யோவான் கல்லூரி — 10-30 a.m.

**16** வயது கீழ் (இசைக்கருவி) —
பரி. யோவான் கல்லூரி — 10-30 a.m.

**WESTERN MUSIC:**

Under 10 (Vocal) —
Chundikuli Girls College — 8-30 a.m.

Under 13 (Vocal) —
Chundikuli Girls College — 8:30 a.m.

Under 16 (Vocal) —
St. John's College — 8-30 a.m.

Under 16 (Instrumental) —
St. John's College 10-30 a.m.

ஏனைய வயதுப் பிரிவுகளுக்கான நிகழ்ச்சிகள் இறுதிப் போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளன.

**கீழைத்தேச இறுதிப் போட்டி:**
**15 - 10 - 1994** காலை 8-45,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

**WESTERN FINALS:**
**18 - 10 - 1994 — 8-45 a. m.**
Chundikuli Girls College

இறுதிப் போட்டிகளில் பங்குபற்றுவோர்
**12 - 10 - 1994** இற்கு முன் எமது காரியாலயத்தில்
தொடர்பு கொள்ளவும்.

நிகழ்ச்சி செயலாளர்,
வை. எம். சி. ஏ.,
யாழ்ப்பாணம்.

[சி-9286]

---

யாழ். மத்திய கல்லூரியின்
## உதைபந்தாட்ட நூற்றாண்டு விழா

இன்றைய ஆட்டம்:
**S. M. பெர்னாண்டோ**
ஆதரவில்
**ST. PATRICK'S VS J/CENTRAL**
(33201)

---

உ
சிவமயம்
**யாழ்-வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன்**
**கோயில்**
**(வண்ணை — சிவன் கோயில்)**

## நவராத்திரி
### சிறப்பு நிகழ்வுகள்

சொற்பொழிவு;
**5-10-94. 6-10-94** ஆகிய இருதினங்களும்
திரு. ஆறு திருமுருகன் பி. ஏ.
(கம்பன் கழகம்)

**7-10-94** தொடக்கம் **11-10-94** வரையும்
(**5** தினங்கள்)
கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ்
(அகில இலங்கை கம்பன் கழகம்)

**12-10-94. 13-10-94** ஆகிய இருதினங்கள்
திரு. த. சிவகுமாரன் (ஆசிரியர்)
(காரை கம்பன் கழகம்)

தேவஸ்தானம்.
(9289)

---

# மருந்து பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது

★ அன்பர்கள்
★ ஆதரவாளர்கள்
★ வாடிக்கையாளர்கள்

அனைவருக்கும்

## ஓர் மகிழ்ச்சிகரமான செய்தி!

**வன்னி மக்களின் நன்மை கருதி**
எமது மருந்து பால்மா நிறுவனத்தின்
மற்றுமோர் கிளை
**கிளிநொச்சியில் சேவையை இன்று ஆரம்பிக்கின்றது**

# மருந்து பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது

**யாழ். வீதி, கிளிநொச்சி.**

வன்னியில் தனது சேவையை ஆரம்பிக்கும் நிறுவனத் திற்கு வாழ்த்து கூறும் சகோதர நிறுவனங்கள்.

★ மருந்து பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
484, கேணல் கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.

★ மருந்து பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
பிரதான வீதி,
சித்தன்கேணி.

★ மருந்து பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
பிரதான வீதி,
வட்டுக்கோட்டை.

★ மருந்து பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
ஊறணி,
வல்வெட்டித்துறை.

நன்றி

மருந்து பால்மா வகைகள் (தனியார்)
வரைவுள்ளது
(சி-9288)

---

யாழ். றோட்டரிக்
கழகம்

## இலவச கண் சத்திரசிகிச்சை முகாம்-5

யாழ். றோட்டரிக் கழகத்தினரால் 5ஆவது தடவையாக நடத்தப்படும் இலவச கண் சத்திர சிகிச்சை முகாம் இம்முறை சங்கானைப் பகுதி மக் களுக்கு நடைபெற உள்ளது.

கண்ணில் வெண்பூப்படலம் (கற்றரக்ட்) தோன்று வதால் பார்வைக் குறைபாடுள்ள (45 வயதுக்கு மேற் பட்டவர்களுக்கு ஆரம்ப சோதனை நடத்தப்பட்டு, இவர்களில் தெரிவு செய்யப்படுவோருக்கு சத்திர சிகிச்சை செய்யப்படும்.

ஆரம்ப சோதனை 07-10-1994
வெள்ளிக்கிழமை காலை 7மணி
தொடக்கம்
இடம்: சங்கானை அரசினர் வைத்தியசாலை
சத்திர சிகிச்சை 09-10-1994 ஞாயிற் றுக்கிழமை காலை 7மணி தொடக்கம்
இடம்: கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரி

தலைவர்,
யாழ். றோட்டரிக் கழகம்.
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-9263]

---

யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி
மேம்பாட்டு நிதிக்காக ஆசிரியர் கழகத்தால்
நடத்தப்பட்டு 6-10-94 மாலை 4 மணிக்கு
அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு
### முடிவுகள்

1 ஆம் பரிசு இல. **11006**
2 ஆம் பரிசு இல. **00552**
3 ஆம் பரிசு இல. **02936**

ஆறுதல் பரிசில்கள்.

| | | | |
|---|---|---|---|
| 04029 | 12493 | 08056 | 08902 |
| 12743 | 01535 | 03821 | 07790 |
| | 01539 | 04764 | |

பரிசுப் பொருள்களை 31-10-94 க்கு முன்னதாக அத்தாட்சிப்படுத்தி பெற்றுக்கொள்ளவும்.
ஆதரவிற்கு நன்றி

தலைவர்.
ச, தேவராசா

செயலாளர்
A. S. பரந்தாமன்
(33229)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 24 — 02 — 1940



மறைவு: 18 — 09 — 1993

அமரர்
**செல்வராணி சுந்தரலிங்கம்**
திதி: 07 — 10 — 1994

சென்ற ஆண்டு இதே திதியில் எங்களை மீளாத் துயரில் ஆழ்த்திச் சென்ற எம் இதய தெய்வத்திற்கு எங்களின் நினைவு அஞ்சலி!

வி. சுந்தரலிங்கம் எஸ். ஸ்கந்தகுமார்,
பி. வாசுகி, எஸ். மைதிலி, என். பரமானந்தம்,
பி. ஜனனி, எஸ்.ரி. கந்தையா,
சகோதரர்கள் மற்றும்
விமலேஸ்வரன் குடும்பத்தினர்.

செல்வபதி
18/1, சீனியர்லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.
(7949)

---

இந்துசமயப் பேரவை - யாழ்ப்பாணம்
'இந்து தர்மம்' சஞ்சிகை
## வெளியீட்டு விழா

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
காலம்: 08-10-1994 சனிக்கிழமை
முற்பகல் 9மணி

தலைவர்:
பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

ஆசியுரைகள்:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
மஹாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள்

வெளியீட்டுரை:
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
(தலைவர் தமிழ்த்துறை யாழ். பல்கலைக் கழகம்)

முதற் பிரதி பெறுவோர்:
1. திரு. ஈ. சரவணபவன் (முகாமைத்துவப் பணிப்பாளர், உதயன் பத்திரிகை நிறுவனம்)
2. திரு. சு. சோமசுந்தரம் (தலைவர், சுன்னாகம் வணிகர் கழகம்)
3. திரு. எஸ். இராஜேஸ்வரன் (நிறைவேற்றுப் பொறியியலாளர்)
4. திரு. இ. சுரேஸ் (ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ், திருநெல்வேலிச் சந்தி)

அறிமுகவுரை:
பண்டிதர் மு. கந்தையா (பி. ஏ.)

★ நல்லூர் கந்தசாமி கோயில் மஹோத்சவ சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக் கான பரிசில்களும் வழங்கப்படும்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

ஆ. மகாலிங்கம்,
உப தலைவர்.

சி. சக்திகிரீவன்,
கௌரவ செயலாளர்.
[சி-9285]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொந்தப் புத்தியுடன் செயற்பட வேண்டும்

விடுதலைப் புலிகளின் சமாதானத்திற்கான விருப்பத்தை அவர்களின் பலவீனமாகக் கருதக்கூடாது. அரசாங்கம் அவ்வாறு கருதுமாயின் அதனால் ஏற்படும் விபரீத விளைவுகளை அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டி வரும்.

பலாலி இராணுவ முகாமில் இன்னுயிர் நீத்த பன்னிரு வேங்கைகளின் ஏழாவது ஆண்டு நினைவு நாள் அஞ்சலிக் கூட்டத்தில் பேசிய, விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

புலிகள் போர்க் குணம் கொண்டவர்கள். பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு விரும்பமாட்டார்கள். தமது தமிழீழ இலட்சியத்தை கைவிடமாட்டார்கள். சமாதானத்தை விரும்புவதாக அவர்கள் கூறுவதை நம்ப முடியாது. அவர்கள் இப்போது பலவீனமுற்று இருக்கிறார்கள் —

அதனாலேயே சமாதானத்தை விரும்புவதாகக் கூறிப் பேச்சு வார்த்தை நடத்த இணக்கம் தெரிவித்திருக்கிறார்கள். தம்மைப் பலப்படுத்திக் கொண்டதும் பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டு மீண்டும் போராட்டத்தில் குதிப்பார்கள். ஆகையால் அவர்களுடன் பேசுவது என்பதில் அரசாங்கம் மிகக் கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும் — என்றவாறான நச்சுக் கருத்து தெற்கில் விதைக்கப்படுவதை கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவரும் தகவல்களினூடாக அறிய முடிகிறது.

இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடாது. தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கக்கூடாது என்ற சிந்தனைப் போக்குடைய சிங்கள — பௌத்த பேரினவாத சக்திகள் மட்டுமன்றி, அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை ஆதரிப்பதாகக் கூறும் வட்டாரங்களும் மேற்படி கருத்தை முன் வைக்கின்றன.

இரண்டாவது சாரார் பிரதமர் சந்திரிகாவுக்குப் புத்திமதி கூறுவது போலவும், முன் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுமாறு ஆலோசனை கூறுவது போலவும் இந்தத் தொனியில் பேசுகின்றனர்.

மிகக் குறிப்பாக இராணுவத்துக்கு உள்ளே, பேச்சு வார்த்தைகளைக் குழப்பி போரைத் தொடர்வதில் அக்கறையுள்ள சக்திகள் விடுதலைப் புலிகள் குறித்து முன் கூறிய தவறான கருத்தை வேண்டுமென்றே பரப்பி வருகின்றன.

அரசாங்கம், மிகக் குறிப்பாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த இந்த நச்சுக் கருத்தை உள்வாங்கிக் கொண்டதாலேயே போர் நிறுத்தம் செய்யாமலே, சண்டையை ஒரு புறம் நடத்திக் கொண்டு மறுபுறத்தில் சமாதானம் பேசமுடியும் என்ற நிலையைக் கைக்கொள்கிறார்.

இனப்பிரச்சினையில் மட்டுமன்றி போரிலும் சம்பந்தப்பட்ட இருசாராரும் நேரில் பேசிக் கொள்ள ஏற்பாடாகி உள்ள சூழ்நிலையில், சண்டையையும் சமாதானத்தையும் ஒரே வேளையில் நடத்துவது என்பது ஒவ்வாததும் அர்த்தமற்றதுமாகும்.

அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு, விடுதலைப் புலிகள்மீது அரசு பூரண நம்பிக்கை வைக்கத் தயாரில்லை; சமாதானத்திற்கான அதன் விருப்பத்தைச் சரியாக புரிந்து கொள்ளவில்லை; பலவீனத்தின் நிமித்தமே 'விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கு விருப்பம் கொண்டிருக்கிறார்கள் என்ற தவறான கருத்தை உள்வாங்கியிருக்கிறது என்பதனையே வெளிப்படுத்துகிறது!

இனப்பிரச்சினை விவகாரம் தமிழர்களைப் பொறுத்தவரையில் உரிமையோடு கூடிய வாழ்க்கைப் பிரச்சினை மட்டுமல்ல; உயிர்வாழும் பிரச்சினையுமாகும். எனவே, பிரதமர் சந்திரிகாவும் அவரது அரசும் இனப்பிரச்சினை விவகாரத்தில், எடுப்பார் கைப்பிள்ளையாகாமல் தங்கள் சொந்தக் காலில் நின்று சொந்தப் புத்தியுடன் செயற்படுவது அவசியம்.

# வடக்கே புதிய திட்டங்கள் எதனையும் சர்வோதயம் மேற்கொள்ளமாட்டாது!

## உபதலைவர் திருமதி ஆரியரத்னா தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 7

வடபகுதியில் புதிய திட்டங்கள் எதனையும் மேற்கொள்ளப்போவதில்லை என்று சர்வோதய இயக்கம் அறிவித்துள்ளது.

சர்வோதய இயக்கத்தின் உபதலைவர் திருமதி ஆர். ஆரியரத்னா இத்தகவலை தெரிவித்தார்.

வடபகுதியில் புதிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியை வழங்குவதற்கு உதவி வழங்கும் நாடுகள் தயக்கம் காட்டுவதே இதற்குக் காரணம் என்றும் அவர் கூறினார்.

எனினும் - வடபகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ந்தும் செயற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வறியவர்களுக்குத் தேவையான உதவிப் பொருள்கள் மற்றும் மூக்குக்கண்ணாடிகள் ஆகியவற்றை கப்பல் மூலம் வடபகுதிக்கு மாதாந்தம் அனுப்பி வைப்பதற்கு சர்வோதய இயக்கம் ஏற்பாடு செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-எ-3)

# 50 ஆயிரம் பனம் விதை நடும் திட்டம் வலிகாமம் பகுதியில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 7

கற்பகச்சோலை பனம் பண்ணைத் திட்டத்தின் கீழ் வலிகாமம் பகுதியில் 50,000 பனம் விதைகள் நடுகைத் திட்டத்தின் ஆரம்ப நாள் நிகழ்ச்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அராலி வீதி கல்லுண்டாய் நரசிம்மவைரவ கோவிலடி கலைமகள் சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறும்.

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் கற்பகச்சோலை பனம்பண்ணைத் திட்டத்தின் கீழ் தமிழீழத்தில் ஐந்து வருடங்களில் ஐம்பது இலட்சம் பனை மரங்களை நடும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதில் வலிகாமம் பகுதியில் இவ்வாண்டு ஐம்பதாயிரம் பனம் விதைகளை நடுவதற்கு வலிகாமம் ப. தெ. வ. அ. கூ. சங்கங்களின் கொத்தணியும் அதன் அங்கத்துவ சங்கங்களான சங்கானை, சுன்னாகம், தெல்லிப்பளை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ. சங்கங்களும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன. (க)

## இராமிய பாசறை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 7

வடமராட்சி இராஜகிராம கிராமியப் பாசறை மாதாந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை இராஜகிராம மைதானத்தில் மாலை இரவு நிகழ்ச்சிகளாக நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சிகளில் இராஜகிராம கிராமியப் பாசறைப் பொறுப்பாளர் திரு. தி. கண்ணதாசன் விளையாட்டை ஆரம்பித்து வைப்பார்.

இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சிகளில் சிறப்புரைகளும் கலை நிகள்ச்சிகளும் இடம்பெறும்.

இதேவேளை, கடந்த 3ஆம் திகதி நடைபெறவிருந்த கைதடி தெற்கு மறவன்புலோ கிராமியப் பாசறை நிகழ்வு மழை காரணமாகப் பிற்போடப்பட்டு இன்று 7 ஆம் திகதி இடம்பெறும் என அறிவிக்கப்படுகிறது. (க)

## இரு போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 7

கடந்த 23 ஆம் திகதி திருகோணமலை புல்மோட்டைப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலின் போது இரு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

லெப்டினன்ட் மகான் (குமணதாசன் ரவி - அம்பாறை), 2 ஆம் லெப்டினன்ட் விவேக்குமார் (ஆறுமுக வடிவேல் வேணுகோபன் – மட்டக்களப்பு) ஆகியோரே வீரச்சாவு அடைந்தவர்கள் ஆவர். (ஒ-க)

## ஜனாதிபதித் தேர்தல்:

# நேற்று வரை ஆறு பேர் கட்டுப்பணம் செலுத்தினர்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்று வரை ஆறு பேர் தங்கள் கட்டுப் பணத்தை தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் செலுத்தினர் என்று அறிவிக்கப்படுகிறது.

நேற்று இருவர் தங்கள் கட்டுப் பணத்தைச் செலுத்தினர். அவர்களில் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் திரு. காமினி திஸநாயக்கா ஆவார். மற்றவர் முன்னாள் ஐ. தே. க. எம்பியான ஹட்ஸன் சமரசிங்கா ஆவார். இவர் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுகின்றார்.

இவர்களையும் சேர்த்து இது வரை ஆறு வேட்பாளர்கள் தங்கள் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:

- ★ பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா (பொது மக்கள் ஐக்கிய முன்னணி)
- ★ காமினி திஸநாயக்கா (ஐக்கிய தேசியக் கட்சி)
- ★ நிஹால் கலப்பதி (ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி)
- ஹரிச்சந்திரா விஜேதுங்கா (சிங்கள சம்பத பூமிபுத்ர கட்சி)
- ★ ஏ. ஜே. ரணசிங்க (சுயேச்சை — முன்னாள் ராஜாங்க அமைச்சர்)
- ★ ஹட்ஸன் சமரசிங்கா (சுயேச்சை — ஐ. தே. கவின் முன்னாள் எம். பி.) (எ)

# ஓகஸ்ட் மாத நிவாரணம் திங்கள் முதல் விநியோகம்

இடம்பெயர்ந்தோருக்கான ஓகஸ்ட் மாத நிவாரணம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழங்கப்படும் என்று யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

போதிய உணவுப்பொருள்கள் கையிருப்பில் இல்லாத காரணத்தால் கடந்த இரு மாதங்களுக்கான நிவாரணம் இதுவரை வழங்கப்படாதிருந்தது.

'கோமாரி' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டு நிவாரணம் வழங்கத் தேவையானபொருள்கள் ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இம்முறை அரிசி, சீனி, பருப்பு, பால் மா வகைகளே நிவாரணத்துக்கு வழங்கப்படும் என்றும் —

மா வழங்கப்படமாட்டாது என்றும் — அவர் தெரிவித்தார். (ஒ-3)

## புலிகளின் குரல் வானொலியில்

**07 — 10 — 1994**

**வெள்ளி இரவு**

- ★ 8-01 — கலைமஞ்சரி — அறிமுகம். வைத்திய கலாநிதி ஆர். சிர்மாறன் எழுதிய ''சில நோய்களும் சில ஆலோசனைகளும்'' சிறுகதை —சத்தியமூர்த்தி எழுதிய ''எப்போது'' கவிதை— போராளி இளங்கதிர் எழுதிய ''காத்திருப்பு''
- ★ 8-25 —கணப்பொழுது— சி. கண்ணம்மா எழுதிய ''கப்டன் ஈழமாறன்''
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — அரசியல் அரங்கம் — வே. பாலகுமாரன் எழுதிய ''கொற கொல்ல வளவில் குழி பறிப்புக்கள்''
- ★ 8-50 —வாத்திய கானங்கள்

**08— 10 — 1994**

**சனி காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## மாலதி நினைவு கட்டுரை போட்டி முடிவு

யாழ்ப்பாணம், ஒக். 7

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் வீரச்சாவடைந்த பெண் போராளி 2ஆம் லெப்டினன்ட் மாலதியின் 7 ஆம் ஆண்டு நினைவை ஒட்டி விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு மாவட்ட மட்டத்தில் கட்டுரைப் போட்டிகளை நடத்தியிருந்தது. அதில் யாழ்.மாவட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்றோர் விவரம். வருமாறு:-

முதலாம் இடம் — பிரேமினி கணபதிப்பிள்ளை, கொக்குவில் மேற்கு.

இரண்டாம் இடம் — தியாகராஜா உருத்திரா, வண்ணார் பண்ணை

மூன்றாம் இடம் — தர்மினி இரத்தினசிங்கம் கோப்பாய் தெற்கு. (ஐ)

# நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதே முன்னணியின் கொள்கை

## ஜனாதிபதி வேட்பாளர் நிஹால் கலபதி கூறுகிறார்

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதேஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் கொள்கை என்று அதன் ஜனாதிபதி வேட்பாளர் நிஹால் கலபதி தெரிவித்திருக்கிறார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணத்தைச் செலுத்திய பின்னர், செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போது அவர் முன்கண்டவாறு கூறினார்.

தற்போது அமுலில் உள்ள அடக்கு முறைச் சட்டங்கள் ரத்துச் செய்யப்பட வேண்டும். குற்றச் சாட்டுகள் இன்றி சிறை வைக்கப்பட்டுள்ளவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்று முற்போக்கு முன்னணி வற்புறுத்தி வருகிறதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

## ஐ. தே. க. ஆட்சியில் நடந்த பல கோடி ரூபா

# வங்கி மோசடிகள் குறித்து ஆராய தெரிவுக்குழு அமைக்க அரசு முடிவு

கொழும்பு, ஒக். 7

இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியினால் பெரும் பணக்காரர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் வழங்கப்பட்டு, கடந்த ஐ.தே.க. அரசினால் தள்ளுபடி செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான கோடி ரூபா கடனை மீண்டும் அறவிடுவது தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமித்து விசாரணை நடத்த அரசு தீர்மானித்துள்ளது.

இத்தெரிவுக் குழு தற்போதைய நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

1977 முதல் 1994 வரையான காலத்தில் இரு அரச வங்கிகளும் சுமார் 300 பேருக்கு பெரும் தொகைப் பணத்தை கடனாக வழங்கின. அவற்றை அறவிட முடியாத நிலை ஏற்பட்டதை அடுத்து அக்கடன்களை இரு வங்கிகளும் தள்ளுபடி செய்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-எ-6)

## கைதடியில் முதியோர் வார நிகழ்வுகள்

தென்மராட்சி, ஒக். 7

சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி முதியோர் வார விழா இன்று 7 ஆம் திகதி காலை 9மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் முதியோர் இல்ல பொறுப்பதிகாரி திரு. க. அ.கனகேந்திரன் தலைமையில் நடைபெறும்.

முதியோர் வாரத்தையிட்டு இல்ல முதியோர்களிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி, கலை நிகழ்ச்சிப் போட்டிகள், சுகாதாரம் பேணல் போட்டிகள் ஆகியவற்றில் தேர்வு பெற்ற முதியோர்களை கௌரவித்து பரிசில்கள் வழங்கப்படும்.

விழாவில் சங்கீதபூஷணம் ம. இராஜசிங்கத்தின் மாணவர்களின் இசை நிகழ்ச்சியும் இடம் பெறும். (க-117)

# அமெரிக்க ஒலிபரப்பு நிலையத்தின் அமைப்பு வேலையை இடைநிறுத்துக

## சிலாபம் ஆயர் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 7

இரணவிலவில் அமெரிக்க ஒலிபரப்பு நிலையத்தைக் கட்டும் வேலைகளை இடைநிறுத்தும்படியும்—

இத்திட்டம் பற்றிய சகல அம்சங்களையும் ஆராய்வதற்கு உயர்நிலை ஆணைக் குழு ஒன்றை நியமிக்கும்படியும் — சிலாபம் ஆயர்

அதிவணக்கத்துக்குரிய பிராங்க் மார்க்கஸ் பெர்ணாண்டோ பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ-எ-6)

# வடபகுதியில் மா பாவனை மும்மடங்காக அதிகரிப்பு!

## மேலதிக மா தருவிக்க ஏற்பாடு

யாழ். மாவட்டத்தில் கோதுமை மாவின் பாவனை மும்மடங்காக அதிகரித்திருப்பதாக யாழ். செயலகத்திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் அறிவித்திருக்கிறார்.

இதுவரை ஒருவர் சராசரியாக மாதாந்தம் 35 கிலோ மாவைப் பாவித்து வந்தார் என்றும் — தற்சமயம் அத்தொகை நூறு கிலோவாக அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதனால் மாவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவிர்த்தி செய்வதற்காக, பருத்தித்துறைக்கு வரவுள்ள 'கோமாரி' கப்பலை திருகோணமலைக்கு இரு தடவைகள் அனுப்பி மா ஏற்றிக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (எ-3)

## காமினிக்கு ஆதரவு அளிப்பதன்மூலம்

# இருக்கும் செல்வாக்கையும் குறைத்துவிட வேண்டாம்

## ஹேமாவுக்கு ரணசிங்கா ஆலோசனை

ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் காமினி திஸநாயக்காவுக்கு ஆதரவளிப்பதன் மூலம் இருக்கும் செல்வாக்கையும் குறைத்துக் கொள்ள வேண்டாம் என்று ஹேமா பிரேமதாஸாவுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் நெருங்கிய சகாவும் முன்னாள் ராஜாங்க அமைச்சருமான ஏ. ஜே. ரணசிங்காவே இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

'ஏற்கனவே உங்கள் செல்வாக்கு குறைந்து விட்டது. இருக்கும் செல்வாக்கையும் குறைக்கும் முயற்சியில் ஈடுபடாதீர்கள். எனவே காமினிக்கு ஆதரவளிக்காதீர்கள்''— இவ்வாறு திரு. ரணசிங்கா ஹேமாவுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு கட்டுப்பணஞ் செலுத்திய பின்னர் திரு. ரணசிங்கா இவ்வேண்டுகோளை விடுத்திருக்கிறார். (ஐ-எ-6)

## வலி. வடக்கு பகுதி குடும்பங்களின்

# வன்செயல் பாதிப்பு பற்றிய முழு விவரங்களும் சேகரிப்பு

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களின் வன்செயல் பாதிப்பு பற்றிய விவரங்கள் தற்போது வலி வடக்கு கிராம சேவையாளர்களால் திரட்டப்பட்டு வருகின்றன.

இடம் பெயர்ந்தவர்கள் மீளக் குடியமர்த்தப்படும் போது புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் கோரப்படும் இழப்புகள் பற்றிய விவரக் கணிப்பீட்டிற்கு சமர்ப்பிப்பதற்கு முன் ஏற்பாட்டு நடவடிக்கையாகவே இவ்விவரங்கள் வலி. வடக்கு பிரதேச செயலகத்தால் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விவரங்களைத் திரட்டுவதற்கான படிவங்கள் வலி. வடக்கு பிரதேச செயலர் பகுதியிலுள்ள கிராம சேவையாளர்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

குடும்பப்பதிவு அட்டை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட குடும்பப்பதிவு அட்டை (பொலித்தீன் காட்) தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் கிராம சேவையாளரை சந்தித்து படிவங்களைப் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு விநியோகிக்கப்படும் படிவத்தில் இடம்பெயர்ந்த போது சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம், பயிர்ச்செய்கை காணி பற்றிய விவரம், குடும்ப அங்கத்தவர்கள் எவரும் இறந்து அல்லது ஊனமுற்று இருப்பின் அவை பற்றிய விவரங்கள் கோரப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## யாழ். இந்து சமய பேரவையின்

# சமய சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பு விழா நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை நல்லூர்க் கந்த சுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி நடத்திய சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்ச்சியும், ''இந்து தர்மம்'' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் நாளை (சனி) முற்பகல் 9 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நிகழ்வுகளுக்குத் தலைமை வகிப்பார்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைப்பார்.

பேரவையின் உபதலைவர் திரு. ஆ. மகாலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் மாவை ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ. சு. து. சண்முகநாதக் குருக்களும் ஆசியுரை வழங்குவர்.

தொடர்ந்து சஞ்சிகை வெளியீட்டு உரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸும், அறிமுக உரையை பண்டிதர் மு. கந்தையாவும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு இடம் பெறும். (ஐ)

# சமய அறிவுப் போட்டியில் பரிசு பெறுவோர் விவரம்

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை நல்லூர் கந்தன் உற்சவத்தை ஒட்டி நடத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:-

முதல் பரிசான தங்கப்பதக்கம் பெறுபவர்— செல்வி மிதிலா தியாகராஜா, (கொக்குவில்)

இரண்டாம் பரிசான வெள்ளிப் பதக்கம் பெறுபவர்— செல்வன் கி. திருவனந்தன் (அளவெட்டி)

மூன்றாம் பரிசைப் பெறுபவர்கள்— செல்வன். சி. விசாகன் (நல்லூர்), செல்வன். கே. ஆதித்தன் (கந்தர்மடம்)

இவைதவிர ஆறுதல் பரிசில்களை ஆறு பேர் பெற்றுள்ளனர். அவர்களின் விவரம் வருமாறு:—

வே. நாவலன் (கொக்குவில் மேற்கு), பூ. அகிலன் (கொக்குவில் கிழக்கு,) ச. சண்முக வதனி (கொக்குவில் கிழக்கு), பூ. தேன்மொழி (கோண்டாவில்), க. இறைவி (கோண்டாவில் மேற்கு), பொ. முருகதாஸ் (திருநெல்வேலி).

இவர்களுக்கான பரிசில்களை நல்லை ஆதீனத்தில் நாளை (சனி) காலை இடம்பெறும் விழாவில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் வழங்குவார். (ஐ)

**குளங்களைத் திருத்துவோம் வளங்களைப் பெருக்குவோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ... நூலகம்.


## WANTED IMMEDIATELY

A Christian Lady Warden For the Elder's Home at Putur.

Apply: **THE MANAGER,**
Lockwood House,
9, Vembadi Road,
Jaffna.

(C/9291)



## பிறந்ததின வாழ்த்து

யாழ். பல்கலைக்கழகம் 1994ஆம் ஆண்டு
4ஆம் ஆண்டு இரசாயனவியற்றுறை மாணவன்

செல்வன்
★ ரவி பிரபாகரன் ★

தனது
25ஆவது பிறந்த தினத்தை
இன்று (07-10-1994) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்.

(33226)



## 'கமரா' தவறிவிட்டது

கடந்த சனிக்கிழமை [01 - 10 - 1994] இரவு ஊளாலிக் கடற்பாதையில் பயணிகள் இறங்குதுறையில் பெறுமதி மிக்க [புகைப்படக்கருவி (கமரா) ஒன்று தவறிவிட்டது. அதனை எடுத்தவர்கள் தயவுசெய்து தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். கிளாலி இறங்குதுறைச் செயலகத்திலோ அல்லது குளப்பிட்டிச் சந்தி மோட்டார் சைக்கிள் திருத்தும் கராச்சுடனோ கடிதமூலம் தொடர்பு கொண்டு உதவுமாறு வேண்டுகின்றோம். உரிய சன்மானம் வழங்குவோம்.

(33225)


நங்கூரம் ஆதரவில்
யாழ். இந்துக்கல்லூரி
விஞ்ஞான மன்றம் நடத்திய

## விஞ்ஞானப் பொது அறிவுப் போட்டி முடிவுகள்

### கீழ்ப்பிரிவு

1-ம் இடம்: தி. கோபிநாத் (யா.இ.க)
2-ம் இடம்: ந. ஐங்கரன் (யா.இ.க.)
3-ம் இடம்: சுட்டிலக்கம் J H 2106 (திருக்குடும்ப கன்னியர்மடம்)

### மத்திய பிரிவு

1-ம் இடம்: ம. இளங்குமரன் (யா.இ.க.)
2-ம் இடம்: அ. யூட் பிரணவன் (யா.இ.க.)
3-ம் இடம்: அ. கிறிஸ்ரா நிசாந்தினி (வேம்படி மகளிர்)

### மேற்பிரிவு

1-ம் இடம்: ந. ஜெயகரன் (யா.இ.க.)
2-ம் இடம்: ச. சஞ்சயன் (J/யூனியன் கல்லூரி)
3-ம் இடம்: அ. செந்தூரன் (யா.இ.க.)

(சி/9290)


## 2-ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 12 — 08 — 1940

உதிர்வு: 28 — 09 — 1992

அமரர் ச. பாலசிங்கம்
(பாலா)
(முன்னாள் உதயன் ஊழியர், முன்னாள் வாக்கஸ் ஊழியர்)

திதி: 07 - 10 - 1994

மண் மீது நாங்கள்
கால் பதித்து நிமிர்ந்திடவே
திண்ணமுடன் உழைத்த
எம் தந்தையே உம் நினைவு
எந்நாளும் எங்களுடன்
வாழ்ந்திடுமே!

உங்கள் நினைவில் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
பேர்த்தி, உறவினர்கள்.

344/1, 3ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(33214)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07 - 10 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு எதிரான மனு மீள் விசாரணைக்கு

யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு எதிராக கலாநிதி க. குணராசா தாக்கல் செய்த மனு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழக புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I பதவிக்கு தாம் விண்ணப்பித்த போதும், தமக்கு அப்பதவி தரப்படவில்லை என்றும்—

அதேதுறையில் விரிவுரையாளர் தரம் II பதவிக்கு விண்ணப்பித்த ஒருவருக்கு விரிவுரையாளர் தரம் I பதவி வழங்கப்பட்டதாகவும்—

இந்த நியமனங்களில் இடம்பெற்ற முறைகேடு குறித்து விசாரிக்கவேண்டும் என்றும்—

கோரி கலாநிதி க. குணராசா பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டு சபைக்கு மனுச் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த சபையின் மூன்று நீதிபதிகளும் அந்த மனுவை கடந்த மாதம் 24 ஆம் திகதி தள்ளுபடி செய்திருந்தனர் என்பது தெரிந்ததே.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து கலாநிதி க. குணராசா அப்பீல் செய்து வேறு திகதி தருமாறு கோரினார் என்றும்—

நீதிபதிகள் மூவரும் மீள் விசாரணைக்கு திகதி தர சம்மதம் தெரிவித்துள்ளனர் என்றும்— தெரியவந்துள்ளது.

## றோட்டறியின் கண்சிச்சை முகாம் இன்று சங்கானையில்

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். றோட்டறிக் கழகத்தின் ஐந்தாவது இலவச கண்சிகிச்சை முகாம் இன்று சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் ஆரம்பமாகிறது.

இன்று காலை ஏழு மணி தொடக்கம் கண்பார்வை குறைபாடுள்ளவர்களுக்கான ஆரம்ப வைத்திய பரிசோதனை அங்கு நடத்தப்படும்.

இவர்களில் கண்ணில் வெண்பூப்படலம் (கற்றரக்) பாதிப்புள்ளவர்கள் தெரிவு செய்யப்பட்டு—

அவர்களுக்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியில் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

## முதல் சுற்று...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள் என்னதான் பேச்சுக்கள் ஆரம்பித்தாலும் அரசாங்கம் ஒருபுறமும் ஜனாதிபதி ஒருபுறமும் கருத்தினைக் கொண்டுள்ளனர் எனக் கூறியுள்ளனர். இந்நிலை பேச்சுவார்த்தைக்கு தடைக்கல்லாக அமையலாம்.

ப: ஆம். இன்றைய நிலை அதுவேயாகும். இன்னும் சில வாரங்களில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் எமது கட்சி வெற்றி பெற்றதும் தற்போது உள்ள தடைகள் யாவும் அகற்றப்படும்.

கே. வடபகுதி தமிழ் மக்களுக்கும் தென்பகுதி சிங்கள மக்களுக்கும் நல்லுறவை வளர்க்க பல நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமே?

ப: ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருகிறோம். தடைவிதிக்கப்பட்ட பொருள்களில் பெரும்பாலானவற்றிற்கான தடைகள் நீக்கப்பட்டுள்ளன. தடைநீக்கப்பட்ட பொருள்கள் சிரமமின்றி வடபகுதி சென்றடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இந்நடவடிக்கைகள் மூலம் யாழ்ப்பாணத்திலுள்ள சாதாரண மக்கள் குறைந்த விலையில் பொருள்களை வாங்க முடியும். சமாதானம் பற்றிய நம்பிக்கையை இருபகுதி மக்களுக்கும் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கே; யாழ்ப்பாண மக்களும் குறிப்பாக விடுதலைப் புலிகளின் தலைவர்களும் உங்கள் கணவரான விஜயகுமாரதுங்க மீது மரியாதை வைத்துள்ளனர். அதுபோலவே அவரது மனைவியான உங்கள் மீதும் மரியாதை வைத்துள்ளனர். இதுபற்றி தங்கள் கருத்தென்ன?

### பிரபாவைச் சந்தித்தோம்

ப: வடபகுதி யுத்தம் ஆரம்பித்தபோது அதாவது 1984 இல் நானும் எனது கணவனும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமெனவும், அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் கோரி அரசியற் போராட்டத்தை ஆரம்பித்தோம். அப்போது நாம் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியில் இருந்தோம். யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமெனத் தெரிவித்த ஒரேயொரு சிங்களக் கட்சி ஸ்ரீலங்கா மக்கள் கட்சியேயாகும்.

நாங்கள் பேச்சுடன் நின்றுவிடாது செயலிலும் இறங்கினோம். அப்போது சென்னையில் செயற்பட்டுவந்த தமிழ்க் குழுக்களின் தலைவர்களை பிரபாகரன் உட்பட, சென்று சந்தித்தோம். பின்னர் புலிகளின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் சென்று அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். சிங்கள அரசியல்வாதி என்ற முறையில் சுதந்திரமாக யாழ்ப்பாணம் செல்லக்கூடிய நிலைமை அன்று எனது கணவரான விஜயகுமாரதுங்காவுக்கு மாத்திரமே இருந்தது.

தற்போது நான் பின்பற்றி வரும் கொள்கைகளை நான் சிறுவயதிலேயே கொண்டிருந்தேன். 1958 இல் பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அப்போது எனக்கு வயது 12 இருக்கும். (இப்போது உங்களின் வயது என்ன என வசந்தராஜா கேட்டபோது பெண்களின் வயதைக் கூறக்கூடாது எனப் பிரதமர் தெரிவித்தார்.) அப்போது பாடசாலையில் மாணவிகளான நாங்கள் அதுபற்றி விவாதிப்போம்.

தமிழரசுக் கட்சியின் அப்போதைய செயலாளர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனின் மகளும் என்னுடன் படித்தார். பின்னர் எனது பல்கலைக்கழக நாட்களிலும் இதுபற்றி வாசித்தறிந்தேன்.

இலங்கையிலுள்ள அரசியற் கட்சிகள் இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமது கொள்கைகளை வகுக்க வேண்டுமென விரும்பினேன். இது குறித்து ஸ்ரீ. ல. சு. கட்சியும் ஒரு ஸ்திர நிலையை எடுக்க வேண்டிய நிலையை 1979, 1980, 1981 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற சம்பவங்கள் ஏற்படுத்தின. அக்கால கட்டத்தில் தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர், சுட்டெரிக்கப்பட்டனர், யாழ்ப்பாண நூல் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது.

கே: நீங்கள் பதவிக்கு வந்த பின்னர் மக்களுடைய வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்திர்கள்?

ப: நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைத்துவருகிறோம்.

★ மைசூர் பருப்பின் விலையைக் குறைத்ததுடன் போதுமான கையிருப்பை இந்தியாவிலிருந்து தருவித்துள்ளோம்.

★ டீசல், மண்எண்ணெய் ஆகியவற்றின் விலையைக் குறைத்துள்ளோம். இது வாகனப் போக்குவரத்திற்கு நிவாரணமளித்துள்ளதுடன் பொருள்களின் விலையும் குறையக் காரணமாக அமைந்துள்ளது.

★ உரத்தின் விலையைக் குறைத்துள்ளோம்.

★ விவசாயக் கடனை ரத்துச் செய்துள்ளோம்.

★ கோதுமை மாவினதும் பாணினதும் விலையைக் குறைத்துள்ளோம்.

(அ-க)

## இன்று

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. சி. ஆனந்தராஜா ''மணிவாசகம் தந்த வாதவூரடிகள்'' எனும் பொருளில் இசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார். திரு.செ. ஜெகநாதன் அறிமுகவுரையை நிகழ்த்துவார். (க)

★ ★ ★

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விஞ்ஞான தின விழாவும் ''இந்து விஞ்ஞானி'' இதழ் வெளியீடும் இன்று காலை 9 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

விஞ்ஞான மன்றத் தலைவர் செல்வன் வே. ப. வேழத்தெழிலன் தலைமையில் நடைபெறும் விழாவில் வைத்திய நிபுணர் பொ. சொர்ணலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (க)

★ ★ ★

கடந்த திங்கட்கிழமை நடைபெற இருந்த தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும், கலைவிழாவும் இன்று வெள்ளி மாலை 4.30 மணிக்கு, கல்லூரி திறந்தவெளி அரங்கத்தில் நடைபெறும். (ஓ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் வடமராட்சி வலயத்துக்கான தடகளப் போட்டிகள் நாளை பிற்பகல் 2.00 மணி முதலும் நாளை மறுதினம் காலை 8 மணி முதலும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையின் வடமராட்சிப் பொறுப்பாளர் திரு.செல்வன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் திருசெ.ஸ்ரீனிவாசனும், சிறப்பு விருந்தினராக நெல்லியடி ம.ம.வி. அதிபர் திரு.எஸ்.சிற்றம்பலமும் பங்குபற்றுவர். [உ]

## துப்பாக்கிச் சூடு

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று காலை 8 மணியளவில் யாழ் கரையோரப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. [இ-15]

## காணாமற்போன...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரை ஜீப் ஒன்றில் ஏற்றி பலாலிக்கு கொண்டு சென்றனர்.

அங்கிருந்து மூதாட்டியை ஹெலி மூலம் கொழும்புக்குக் கொண்டு சென்று ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

சில நாட்களின் பின்னர் மீண்டும் அவரை கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்ப ஒழுங்கு செய்யப்பட்டது.

அவர் நேற்று கப்பல் மூலம் இங்கு திரும்பி வந்தார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டிலேயே இவரை அழைத்துவர ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வருணன் பகுதியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை பொன்னாச்சி (90 வயது) என்பவரே அந்த மூதாட்டி ஆவார்.

இவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

## வடக்கு-...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தலாம் எனவும் —

அதை அரசு பரிசீலிக்கும் எனவும் — பிரதி பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

நாட்டில் பெரும்பான்மையான மக்கள் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்பதையே விரும்புகின்றனர்.

அரசு மக்களின் விருப்பத்தையே பூர்த்தி செய்யும் — என்று அவர் மேலும் கூறினார். (இ-3)

## ஹெலி வீசிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என விளித்து இந்தப் பிரசுரம் காணப்பட்டது.

பொருளாதாரத் தடை தளர்வு குறித்தும், சமாதான முயற்சி குறித்தும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிரசுரத்தின் இறுதியில் ''உங்களுக்காகப் பாடுபடும் தெற்கிலுள்ள சகோதர சகோதரிகள்'' என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கிடையில் நேற்று ஹெலி வீசிய [illegible] பெரிய பெரிய [illegible] ''[illegible]'' என [illegible] (ஒ-3-15-4-51)


## வர்ணப் படச் சுருள்
## புதிய விலை அறிமுகம்

மலிவு விலையில் வர்ணப்படச்சுருள்கள் மொத்த, சில்லறை விலைகளில் வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

[135/36 வர்ணப்படச்சுருள் 120/- ரூபாவில் இருந்து]

மேலதிக விவரங்கள் நேரில்:

கலக்சி புகைப்பட சேவை
337 1/1, முதலாம் மாடி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9287)


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி கனகசபை

நீராவியடியைச் சேர்ந்த சின்னத்தம்பி கனகசபை நேற்றுக் காலமானார்.

அன்னார் தெய்வானையின் அன்புக் கணவரும், பரராசசிங்கம், சரோஜினிதேவி, செல்வநாயகி, தவமணிதேவி, தையல்நாயகி, லதா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அன்னலட்சுமி, சண்முகராசா, காலம் சென்ற கந்தசாமி, பஞ்சாட்சரம், துரைராசா, ஆறுமுகம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7-10-94) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி வாசுகி நாகராசா
(பேரப்பிள்ளை)

34/1, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(33232)

## V.K. துரைராசா

(மின்தறி தொழில் நுட்பவியலாளர் Weaving Master சங்கானை, பண்டத்தரிப்பு M.P.C.S. ஸ்ரீராம்ஸ், R.T.S. Mills முன்னாள் ஊழியர்)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் தொல்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட V. K. துரைராசா நேற்று 6-10-94 இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை, ஆச்சிப்பிள்ளையின் மகனும், புவனேஸ்வரி (பேபி) யின் அன்புக் கணவரும், பாலராஜா (மாவீரன் 2 ஆம் லெப். தும்பன்), சோபியா, புவனராஜா, திவினியா, தர்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், தவமணி, குணமணி (பிரான்ஸ்), ஞானமணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற இரத்தினசிங்கம், தனபாலசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7-10-94) காலை 10.00 மணிக்கு நடைபெற்று, மூளாய் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி (பேபி)

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

(33230)

## திருமதி சிதம்பரம் இராமுப்பிள்ளை

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சிதம்பரம் இராமுப்பிள்ளை 6-10-94 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலம்சென்ற வேலாயுதபிள்ளை, முருகையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தட்சணாமூர்த்தி (ஆசிரியர்), வைத்திலிங்கம் (நில அளவைப் பகுதி), செகராசபிள்ளை (வர்த்தகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற மகேஸ்வரி (ஆசிரியை), யோகம்மா, திலகவதி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும், சுந்தரவடிவேல், சுகந்தினி, ஆனந்தவடிவேல், அருள்வடிவேல், அன்புவடிவேல், தங்கவடிவேல், சிவகலா, சிவகுமார், செந்தில்வேல், செந்தில் குமரன், அருள்வாணி, சகிலா, செந்தூரன், யாழினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (7-10-94) வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
எஸ். தட்சணாமூர்த்தி
(ஆசிரியர்)

இணுவில் கிழக்கு,
இணுவில்.

(33227)

## தம்பையா இராசேந்திரம்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தம்பையா இராசேந்திரம் 4. 10. 94 இல் காலமானார்.

அன்னார் எலிசபெத் செல்லம்மாவின் அன்புக் கணவரும், அப்புத்துரை, தவமணிதேவி, சரோஜாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வசந்தி (ஆசிரியை யாழ்ப்பாணக் கல்லூரி), ரவீந்திரமோகன் (தென்னிந்தியத் திருச்சபை, மாங்குளம்) சுகந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், பற்றிக்பாலராஜா (ஆசிரியர் சென் பற்றிக்ஸ் கல்லூரி) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

நல்லடக்க ஆராதனை இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, வட்டுக்கோட்டை தென்னிந்தியத் திருச்சபைச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எஸ். பற்றிக் பாலராஜா
(மருமகன்)

கல்லூரி ஒழுங்கை,
வட்டுக்கோட்டை.

(33231)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org